ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் திறக்கப்படுவது வெறும் பெரியார் படமல்ல!

சிரஞ்சீவித் தத்துவம் சீரிளமைத் தன்மையால் உலகாளப் போவதற்கான முன்னூட்டத் தடம்!

எவ்வளவு நல்ல தத்துவமானாலும் அதை முன்னெடுக்கும் தலைமை தகுதி வாய்ந்ததாய் அமைந்தால் மட்டுமே அந்தத் தத்துவம் வெற்றிபெறும். அப்படி ஒரு தத்துவத்தையும் தலைமையையும் காலம் பெரியாரின் வடிவத்தில் தமிழர்களுக்கு வழங்கியது. அந்தக் காலக் கொடையை அதிகாரத்தில் அமரவைத்தார் அண்ணா. அவருக்குப்பின் அந்தத் தத்துவத்தை தளராமல் அரியணையில் அமரவைத்தார் கலைஞர்.

எம்.ஜி.ஆர். என்ற திரைபிம்பத்தை ஏந்தி அந்தத் தத்துவத்தை இன எதிரிகள் சிதைக்க முயன்றபோது ஆட்சிக் கட்டிலை இழந்தும் காவல் அரணாய் காத்துநின்றவர் அவர். அதிகாரத்திற்கு வந்த போதெல்லாம் தத்துவத்தை அரியணை ஏற்றியவரும் அவரே. அவருக்குப்பின் தத்துவம் என்னாகும்? கவலை கொண்டவர்கள் இருக்கத்தான் செய்தார்கள்; உலகெங்கும் நூறாண்டுகள் ஒரு தத்துவம் கோலோச்சியது இல்லை என்பதால்! கவலை கொண்டவர்கள் இன்று கர்வம் கொள்கிறார்கள். தத்துவம் தகுதிமிக்க தலைவனின் குடையின் கீழ் பத்திரமாய் இருப்பதால்! அதற்கு தமிழ் எல்லைக்குள் அண்ணாவால் அரியாசனம் ; இந்திய எல்லைக்குள் கலைஞரால் சரியாசனம். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மாமனிதரால் அது உலகமயமாகி இன்று உச்சம் தொட்டது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் திறக்கப்படுவது வெறும் படமல்ல; சிரஞ்சீவித் தத்துவம் சீரிளமைத் தலைமையால் உலகாளப் போவதற்கான முன்னூட்டத் தடம்!

வாழ்க நீ எம்மான் இவ்வையத்து நாட்டிலெல்லாம்.

ஆ.இராசா எம்.பி.
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.

மாணவர்களின் உயர்வுக்காகப் பாடுபடும்

நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின வாழ்த்துகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப். 6-

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், “மாணவர்களின் உயர்வுக்காகப் பாடுபடும் நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின வாழ்த்துகள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பெற்றோர்கள் ஆசிரியர்களை நம்பிப் பிள்ளைகளை ஒப்படைக்கிறார்கள்! பிள்ளைகள் பெற்றோரை விட ஆசிரியர்கள் சொல்வதையே அதிகம் நம்புகிறார்கள்...

அந்த மாணவர்களுக்குத் தமிழை, அறத்தை, அரசியலை, அறிவியலை என அனைத்தையும் கற்பித்து அவர்களின் உயர்வுக் காகப் பாடுபடும் நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள், அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

காணொலிக் காட்சி வாயிலாக – நாளை

மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மண்டலப் பொறுப்பாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் அண்மையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும், அதனை அடுத்து நடைபெற்ற மண்டல பொறுப்பாளர்கள் கூட்டத்திலும் அறிவுறுத்தியபடி, வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் நாம் வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கின் அடிப்படையில், உடனடியாக ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள BLO, BLA2 மற்றும் BLC விவரங்களை சரிபார்க்கும் பணி மாவட்டக் கழகச் செயலாளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விவரங்கள் கள அளவில் சரிபார்க்கப்பட்டு தலைமைக் கழகத்திற்கு வரும் 10/09/25 அன்று ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஒட்டி மாவட்டங்களில் ஆற்ற வேண்டியுள்ள பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நாளை 07/09/2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் தங்கம் தென்னரசு
மண்டலப் பொறுப்பாளர்
செயலாளர், விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.